

நகர் ஊரமைப்புத்துறை (DTCP)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்
உடுமலைப்பேட்டை நகராட்சி

திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை நகராட்சி, வார்டு : ஜி, பிளாக் : 4, நகரளவை எண் : 1/14-ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்

அளவு : 1:500

இணையதள விண்ணப்ப எண் : C0UG3LQU நாள் : 30.09.2022

வ

குறிப்பு :

1.மனைப்பிரிவின் பரப்பு : 2.37 ஏக்கர் (அ) 9590.95 சமீ
2.மனைப்பிரிவு சாலையின் பரப்பு : 2213.45 ச.மீ
3.ஒதுக்கிய மனைகள் : 31
4.மனைப்பிரிவின் எல்லை
5.நிலையிலுள்ள சாலை
6.பொது ஒதுக்கீடுகள்

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை :

i.மனைப்பிரிவு சாலை பரப்பு - 2213.45 ச.மீ.

ii. பூங்கா

ஒதுக்கப்பட வேண்டிய பூங்கா பரப்பு : (9590.95 ச.மீ. - 2213.45 ச.மீ.) x (10 / 100) = 737.75 ச.மீ.

ஒப்படைக்கப்பட்ட பூங்கா பரப்பு — 737.75 ச.மீ. (மனுதாரர் பூங்கா பரப்பிற்கு ஈடான அரசு வழிகாட்டி மதிப்புத்தொகை ரூ.69,20,679/-னை உரிய அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது)

iii.

உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட வேண்டிய பொது உபயோகப்பரப்பு — மனைப்பிரிவின் பரப்பு - மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு x (0.5/100)
(9590.95 ச.மீ - 2213.45 ச.மீ) x (0.5/100) = 36.89 ச.மீ.

ஒப்படைக்கப்பட்ட பரப்பு = 38.00 ச.மீ. = 0.52%

iv.

தமிழ்நாடு மின்பகிர்மானக்கழகம் / உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட்டவை :

மின்பகிர்மானத்திற்குரிய பொது உபயோகம் — மனைப்பிரிவின் பரப்பு- மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு x (0.5/100)
(9590.95 ச.மீ - 2213.45 ச.மீ) x (0.5/100) = 36.89 ச.மீ.

ஒப்படைக்கப்பட்ட பரப்பு = 38.00 ச.மீ. = 0.52%

கட்டிட வரம்பு : 9.00மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.50மீ -ம் விடப்படல் வேண்டும்.
9.00மீ முதல் 18.00மீ அகலம் உள்ள சாலைகளுக்கு 3.00மீ-ம் விடப்படல் வேண்டும்.

மூலை முடக்கு: 12.00மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.50மீ x 1.50மீ விடப்படல் வேண்டும்.
12.00மீ முதல் 30.5மீ அகலம் உள்ள சாலைகளுக்கு 4.50மீ x 4.50மீ விடப்படல் வேண்டும்.

நிபந்தனைகள் :

1. அரசாணை எண் : 18 மற்றும் 16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் : 04.02.2019 மற்றும் 31.01.2020 - ன் படி நடவடிக்கை மேற்கொள்ளபட வேண்டும்.

2. அரசாணை எண் : 181 வீ.வ. (ம) ந.பு.வ.துறை நாள் : 09.12.2020 ன் படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்குத் தேவையான தார்சாலை வசதி, மழைநீர் வடிகால் வசதிகள், மேல்நிலைத்தொட்டி, தெருவிளக்கு வசதி மற்றும் இதர வசதிகள் ஆகிய அடிப்படை வசதிகள் மனுதாரரால் அமைக்கப்பட்டு அதனை உள்ளாட்சியால் உறுதி செய்த பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.

3. இம்மனைப்பிரிவிற்கு நகராட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்த துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும், கமிஷ்னர் உடுமலைப்பேட்டை நகராட்சி அவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

4. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதில் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் ரத்து செய்யப்படும்.

5. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வரைபட நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்தவித மாற்றம், விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 0.6 மீ x 1.2 மீ என்ற குறைந்தபட்ச அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

7. உத்தேச மனைப்பிரிவு சாலைகள் தார் சாலைகளாக அமைக்கப்பட்ட பின்னர் உத்தேச மனைப்பிரிவு சாலைகளின் தரம் குறித்து யூனியன் பொறியாளரிடமிருந்து தகுதிச்சான்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

SWP/DTCP/TIRUPPUR/LAYOUT NO : 411 / 2022

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் / உதவி இயக்குநர் (மு.கூ.பொ.)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
திருப்பூர் மாவட்டம்.

Signature Not Verified
Signed by: Assistant Director
Location:Tiruppur
Date:2022.12.30 12:45:34